# 10. நாமான்



நான் ஒரு சிறுமி. தூரதேசமொன்றில் ஒரு வீட்டில் வேலை செய்து வந்தேன். வீட்டில் உள்ளவர்கள் என்னை அதிகம் நேசித்தார்கள். அவ்வீட்டுத் தலைவரின் பெயர் நாமான். அவன் ஒரு தொழு நோயாளி. அதனால் நான் துக்கம் அடைந்தேன்.



எனது ஊரில் வாழ்ந்து வந்த எலிசாவை நினைத்தேன். அவன் தேவபிதாவின் பணியாளன். எலிசாவிடம் சென்றால் நாமானுக்கு சுகம் கிடைக்கும் என அந்த வீட்டு அம்மாவிடம் கூறினேன்.

நாமான் எலிசாவின் வீட்டுக்குச் சென்றான்.
"நீ போய் யோர்தான் நதியில் ஏழுமுறை
மூழ்கினால் உன் உடல் நலம் பெறும்" என்று
எலிசா நாமானிடம் கூறினான்.



நாமான் எலிசா கூறியபடியே செய்தான். கடவுள் அருளால் சுகம் கிடைக்குமென எண்ணி யோர்தான் நதியில் மூழ்கினான். அவன் சுகம் பெற்றான். நாமான் விசுவாசத்துடன் எலிசா கூறியபடி செய்தான். எனவே தேவபிதா அவனுக்கு சுகம் கொடுத்தார்.